**செ.வெ.எண்.06/நவம்பர்** **நாள். 05.11.2019**

**தனியார்துறை நிறுவனங்களும், தனியார் துறையில் பணிபுரிய விருப்பம் உள்ள அனைத்து வகை பதிவுதாரர்களும் நேரடியாக சந்திக்கும் தனியார் வேலைவாய்ப்பு முகாம் வருகின்ற 08.11.2019 அன்று காலை 10.30 மணிக்கு தருமபுரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.**

**தகுதியும், விருப்பமும் உள்ள நபர்கள் கலந்துகொண்டு பயன்பெறலாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இ.ஆ.ப. அவர்கள் தகவல்.**

தனியார் துறை நிறுவனங்களும், தனியார் துறையில் பணிபுரிய விருப்பம் உள்ள மனுதாரர்களும் நேரடியாக சந்திக்கும் ”**வேலைவாய்ப்பு முகாம்**” ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமையன்று தருமபுரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நடைபெற்று வருகிறது. **நவம்பர்-2019** மாதத்தின் இரண்டாவது வாரத்திற்குரிய தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமானது வருகின்ற 08.11.2019 அன்று மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. எனவே, தனியார் துறை நிறுவனங்கள் தங்களுக்குத் தேவையான நபர்களை அவர்களது நிர்வாகிகளைக் கொண்டோ அல்லது நேரில் வந்தோ தேர்வு செய்து கொள்ளலாம். இது ஒரு இலவசப்பணியே ஆகும்.

இம்முகாமில் பல்வேறு நிறுவனத்தினர் கலந்து கொண்டு பள்ளி படிப்பு, ஐடிஐ, டிப்ளமோ, அனைத்து பட்டப்படிப்பு முடித்தவர்களை பணிக்கு தேர்வு செய்ய உள்ளனர். மேலும் பல்வேறு தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்டு விற்பனையாளர், மார்க்கெட்டிங் எக்ஸிக்யூட்டிவ், சூப்பர்வைசர், மேலாளர், கம்ப்யூட்டர் ஆப்பரேட்டர், அக்கவுண்டன்ட், கேசியர், மெக்கானிக் போன்ற பணிகளுக்கு டிப்ளமோ, பட்டபடிப்பு மற்றும் பள்ளிப்படிப்பு முடித்த ஆண், பெண் மற்றும் அனைத்துவித கல்வித்தகுதிக்கும் ஆட்கள் தேவை என தனியார்த் துறை நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. இது தவிர இதர கல்வித்தகுதிகள் உடையோரும் தகுந்த பணியிடங்களுக்கு பரிசிலீக்கப்படுவா.

ஆகவே, மேற்படி பணிகளுக்கு தகுதியும், விருப்பமும் உள்ள நபர்கள் அனைவரும் வருகின்ற 08.11.2019 அன்று (வெள்ளிக்கிழமை) காலை **10.30** மணிக்கு தருமபுரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நடைபெறவுள்ள தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இ.ஆ.ப. அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**